மாலை பதிப்பு
# சுபீட்சம்
அனைத்து விடயங்களும் மக்களுக்காகவே
SUPEEDSAM
EVERYTHING FOR PEOPLE
நிகழ்நிலை பத்திரிகை; அனைத்து விடயங்களும் மக்களுக்காகவே
செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள
supeedsam.com
13.10.2022 வியாழக்கிழமை
supeedsam.com
supeedsam@gmail.com

## மட்டு எம்பிக்கு பிடியாணை நீதிமன்றத்தில் ஆஜரானார்

### கொக்கட்டிச்சோலை நினைவு தூபியில் அஞ்சலி செலுத்தியமைக்காக வழக்கு பதிவு



**(ரக்ஸனா)**

ஒரு நட்டின் ஜனநாயக ஆட்சி எங்களை நீதிமன்றம் வரைக் கொண்டு சென்றுள்ளது. எமக்கு பிடியாணை இருப்பதாக எவரும் சொல்லவில்லை. புதன்கிழமை(12) கொக்கட்டிச்சோலையில் நடைபெற்ற விவசாய கூட்டத்திற்கு நான் சென்றபோது அங்கு வைத்துதான் கொக்கட்டிச்சோலை பொலிஸ் நிலையத்தைச் சேர்ந்த பொலிசார் ஒருவர் எனக்கு பிடியாணை இருப்பதாகத் தெரிவித்தார். அதன் பின்னர்தான் நான் அதுபற்றி விசாரித்றிந்தவேளையிலே மகிழடித்தீவு இறால்பண்ணையிலே 1987 ஆம் ஆண்டிலே தஞ்சம்புகுந்த 150 இற்கு மேற்பட்ட பொதுமக்களை அரசபடைகள் கொன்று குவித்திருந்தார்கள். அம்மக்களை நினைவுகூருவதற்காக மகிழடித்தீவில் அமைந்துள்ள நினைவுத்துபியில் அஞ்சலி செலுத்தியதற்காகத்தான் எமக்கு கொக்கட்டிச்சோலை பொலிசார் வழக்குப் பதிவு செய்துள்ளனர். ஏன தமிழ் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கோவிந்தன் கருணாகரம (ஜனா) தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பு கொக்கட்டிச்சோலை படுகொலை தினைத்தை நினைவு கூர்ந்ததற்காக கொக்கட்டிச்சோலைப் பொலிசாரால் மட்டக்களப்பு நீதவான் நீதிமன்றில் தொடரப்பட்ட வழங்கில் வியாழக்கிழமை(13) ஆஜராகியிருந்தார். இதன்பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார். இதன்போது அவர் மேலும் குறிப்பிடுகையில்... 2015 இல் இருந்து 2019 வரை அவ்வாறு உயிரிழந்தவர்களை நினைவு கூருவதற்கு எமக்கு உரிமை இருந்தது. 2019 இல் கோட்டபாஜ ராஜபக்கஸ அரசு இவ்வாறான நிகழ்வுகளை கடுமையாக எதிர்த்திருந்தது. அக்காலகட்டத்தில்

02



## எரிக் சொல்ஹெய்மிற்கும், கூட்டமைப்பின் முக்கியஸ்தர்களுக்கும் இடையில் சந்திப்பு

**(ரக்ஸனா)**

நோர்வேயின் முன்னாள் அமைச்சரும், இலங்கைக்கான முன்னாள் சமாதான தூதுவருமான எரிக் சொல்ஹெய்மிற்கும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முக்கியஸ்தர்களுக்கும் இடையில் சந்திப்பொன்று இடம்பெற்றுள்ளது. இதற்கமைய கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களான எம்.ஏ சுமந்திரன் மற்றும் இரா.சாணக்கியன் ஆகியோரை சந்தித்து பேசியுள்ளதாக எரிக் சொல்ஹெய்ம் தனது டுவிட்டர் பக்கத்தில் தெரிவித்துள்ளார். 'நாடாளுமன்ற உறுப்பினர்களும் பழைய நண்பர்களுமான எம்.ஏ சுமந்திரன் மற்றும் இராசமாணிக்கம் சாணக்கியன் ஆகியோருடன் கொழும்பில் சந்தித்து உரையாடியிருந்தேன்.' என அவர் தனது டுவிட்டர் பக்கத்தில் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கை எதிர்நோக்கியுள்ள பொருளாதார நெருக்கடி தொடர்பில் இதன்போது கவனம் செலுத்தப்பட்டிருந்ததாக குறிப்பிடப்படுகின்றது. அத்துடன், பொருளாதார மீட்சி, பசுமையான அபிவிருத்திகள் மற்றும் அரசியல் சீர்திருத்தம் தொடர்பில் ஆராயப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

## தள்ளாடும் பாலத்தைக் கடந்த ராஜபக்ச குமரர்கள் இளைய தலைமுறையை அடக்க முயல்கின்றனர்



### எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ

தற்போதைய அரசாங்கம் மாளிகைகளில் இருந்த வன்னம் இளைஞர்களை அடக்குவதற்கான திட்டங்களை வகுத்து வருகின்ற போதிலும் எதிர்வரும் காலங்களில் ஐக்கிய மக்கள் சக்தி அரசாங்கத்தின் கீழ் இந்த மாளிகைகள் நாட்டைக் கட்டியெழுப்பும் இளைஞர்களுக்கு நன்மை பயக்கும் இரு மையங்களாக மாற்றப்படும் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ கம்பளையில் தெரிவித்தார். தற்போதைய ஜனாதிபதி பதவியேற்ற அன்றைய தினம்,தான் ஒரு தள்ளாடும் பாலத்தை

02

## எனது பதிவின் மூலம் சம்மந்தனின் சிறப்புரிமை மீறப்பட்டமைக்காக மன்னிப்பினைக் கோருகின்றேன் - சந்திரகுமார்



**(ரக்ஸனா)**

பாராளுமன்ற உறுப்பினர் இரா சம்மந்தன் அவர்கள் 19.07.2021 அன்று பாராளுமன்றத்திற்கு வருகை தந்தமையினை வீடியோவாக முகப்புத்தகத்தில் பதிவேற்றம் செய்திருந்தேன். குறித்த முகப் புத்தக பதிவு தொடர்பில் 06.08.2021 அன்று பாராளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் அவர்கள் தனது பாராளுமன்ற உரையில் எனது முகநூல் பதிவினூடாக பாராளுமன்ற உறுப்பினர் இரா.சம்மந்தன் அவர்களுடைய சிறப்புரிமை மீறப்பட்டுள்ளதாகவும் குறித்த பதிவு தொடர்பில் விசாரணை நடத்தவேண்டும் எனவும் குறிப்பிட்டிருந்தார். எனது பதிவின் மூலம் சம்மந்தனின் சிறப்புரிமை மீறப்பட்டமைக்காக ஊடகங்கள் வாயிலாகவும் மன்னிப்பினைக் கோருகின்றேன். என தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் பிரதிச் செயலாளர் யோகராஜா சந்திரகுமார் தெரிவித்துள்ளார். இவ்விடையம் தொடர்பில் மட்டக்களப்பில் அமைந்துள்ள கிழக்கு ஊடக மன்றத்தில் வியாழக்கிழமை(13)

02

## இலங்கைத் தமிழ் மக்களைப் பாதுகாக்க வேண்டிய பொறுப்பு இந்தியாவிற்கு இருக்கின்றது - சுரேஸ்



**(ரக்ஸனா)**

இலங்கையிலுள்ள தமிழ் மக்களைப் பாதுகாக்க வேண்டிய மிகப் பெரிய பொறுப்பு இந்தியாவிற்கு இருக்கின்றது. ஆனால் தங்களுடைய நாட்டின் நலனை மாத்திரம் வைத்துக் கொண்டு கடந்த காலங்களிலிருந்து இந்தியா செயற்பட்டு வருகின்றது. ஐ.நா.மனித உரிமை பேரவையில் இந்தியா செயற்பட்ட விதத்தை தமிழ் மக்கள் ஏற்றுக்கொள்ள முடியாத ஒன்றாக இருக்கின்றது. இந்தியாவை நாங்கள் வெறுக்கவில்லை, இந்தியா தங்களுடைய

02

MATHE BILDUNGSZENTRUM
கணித கற்கைநெறி மையம்
MBZ
கல்வியே துணை
பள்ளித் தலைமைனைத்தும் பேரெடுக்கும் பிள்ளைகள்.
அள்ளிப் பெற்றுவரும் நிறைவான புள்ளிகள்!
உள்ளதை சொல்வதெனில் எங்ஙனம் சாத்தியம்..
எள்ளளவும் பொய்யில்லை எட்டிவந்து பாரும்!!
- MATHE BILDUNGSZENTRUM
Mathe மகேந்திரா-வின் தெளிவான கற்பித்தலில் திருப்தியுறும் பெற்றோர்கள்.
S.MAHENDIRAN
076 431 83 79
mbz.mahe@gmail.com
MATHE மட்டுமல்ல
Deutsch, Französisch, Englisch, Gymi Prüfung
BMS, HMS, FMS, Gymi Probe
அத்தனைக்கும் கீழ்காணும் இடங்களில்
Oerlikon, Uster, Schaffhausen

## மட்டு எம்பிக்கு பிடியாணை

பொதுமக்கள் நினைவுகூருவதற்குத் தயங்கிய நேரம் நாங்கள் அதனை முன்னின்று இந்தவருடம் ஜனவரிமாதம் அவர்களை நினைவு கூர்ந்திருந்தோம். ஆனால் எமக்கு நினைவுகூரக்கூடாது என எவரும் தடையுத்தரவு வழங்கப்படவில்லை. இருந்தபோதும் அப்போது கொக்கட்டிச்சோலைப் பொலிசார் எமக்கு தடைகளை ஏற்படுத்தயிருந்தனர். ஆனாலும் உயிரிழந்தவர்களை நினைவு கூர்ந்து விளக்கேற்றிவிட்டு வந்துவிட்டோம்.

அனாலும் எமக்கு யாரும் அக்குறித்த நிகழ்வுக்கு தடையுத்தரவு வழங்கப்படவும் இல்லை மாறாக அவ்வாறு தடையுத்தரவு வழங்கப்பட்டு நாம் நீதிமன்றிற்குச் செல்லாமல் இருந்திருந்தாலும் பரவாயில்லை, தடையுத்தரவு வழங்கப்படவும் இல்லை, நீதிமன்றிற்கு வருமாறு ஆணை பிறப்பிக்கப்படவுமில்லை, ஆனாலும் எமக்கு பிடியாணை பிறப்பிக்கப்பட்டுள்ளதாக நாம் கேள்வியுற்றோம். இந்நிலையில் நாம் எமது சட்டத்தரணிகளுடாக மோசன் வைத்து நீதிமன்னிறில் ஆஜராகியிருந்தோம். அதற்குரிய அடுத்த தவணை எதிர்வரும் 11 ஆம் மாதம் 2 ஆம் திகதிக்கு ஒத்தி வைக்கப்பட்டுள்ளது. இந்தநாட்டிலே நடப்பவைகளை இந்நாட்டு மக்கள் மாத்திரமின்றி உலகமே அறிந்து கொண்டிருக்கின்றது. ஐ.நா மனித உரிமை ஆணையகத்திலே 2012 ஆம் அண்டிலிருந்து வடகிழக்குத் தமிழர்களுக்கு நடந்த அநியாயங்கள் தொடர்பில் இலங்கைக்கு எதிராக மாறி மாறி பிரேரணைகள் வந்துகொண்டிருக்கின்றன. தற்போது இலங்கை பொருளாதாரத்தில் வீழ்ச்சிகண்டிருக்கும் இக்காலத்தில்கூட அண்மையில் 51, ஒன்று என்ற பிரேணை இலங்கைக்கு எதிரான பிரேணையில் போர்குற்றங்களுக்கு மேலாக பொருளாதாரக் குற்றங்களும் சுமத்தப்பட்டுள்ளன. எனவே ஜனநாயகத்தைக் கடைப்பிடிக்கின்ற நாடு பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு நிவாரணங்களைக் கொடுக்க வேண்டிய அரசு இறந்த மக்களை நினைவுகூர எங்களைக்கூட தண்டிக்கும் அளவிற்கு இருக்கின்றார்கள். அவ்வாறு அவர்கள் நினைப்பது அது முடியாத காரியமாகும். நாம் தொடற்சியாக இறந்த எமது மக்களை நினைவு கூர்ந்து கொண்டே இருப்போம் என அவர் இதன்போது தெரிவித்தார்.

## தள்ளாடும் பாலத்தைக் கடந்த ராஜபக்ச குமரர்கள்

கடக்க வேண்டியுள்ளது என்று கூறியிருந்தாலும்,ராஜபக்ச குடும்பத்தைச் சேர்ந்த சில குமரர்கள் தான் இதுவரை தள்ளாடும் பாலத்தை கடந்துள்ளதாகவும், அந்த குமரர்கள் இப்போது, போராட்டத்தில் ஈடுபட்ட இளைஞர்களை அடக்க வேண்டும் என கூறுவதாகவும் அவர் தெரிவித்தார். 220 இலட்சம் மக்கள் ஆதரவற்ற நிலையிலுள்ள வேளையில்,ராஜபக்சக்களும் அவர்களது தலைமுறையும் தலைநிமிர்ந்துள்ளதாகவும், இந்த குமரரின் ஆலோசனையின் பேரில்,இளைஞர்களுக்குப் புனர்வாழ்வு அளிக்க புனர்வாழ்வுப் பணியகத்தை ஸ்தாபிக்கத் தயாராகி வருவதாகவும்,

எதிர்க்கட்சியாக அதை எதிர்ப்பதாகவும்,தற்போதைய ஜனாதிபதி ராஜபக்சக்களின் ஆலோசனைகளுக்கு அமைவாக செயற்பட வேண்டாம் என வேண்டுகோள் விடுப்பதாகவும்,அவ்வாறில்லை என்றால் ராஜபக்சக்களுக்கு நடந்ததே அவருக்கும் நடக்கும் எனவும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார். ராஜபக்ச குமரர்கள் சொல்லுவதற்காக போராட்டத்தில் ஈடுபட்டுள்ள இளம் தலைமுறையினரை அடக்குமுறைக்குட்படுத்துவதற்குப் பதிலாக,

அரச வன்முறையை அமுல்படுத்துவதற்குப் பதிலாக,தொழிநுட்பப் புரட்சி,ஆங்கில மொழி அறிவு மற்றும் புதிய தொழில்நுட்பம் பற்றிய உயர் புரிதல் மூலம் நாட்டின் இளைய தலைமுறையினர் அறிவு மற்றும் தொழில்நுட்ப ரீதியாக வலுவூட்டப்பட வேண்டும் எனவும் எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார். அரசாங்கம்,அரச பயங்கரவாதத்தை நடைமுறைப்படுத்துவதற்குப் பதிலாக,பாதுகாப்புப் படையினரைப் பயன்படுத்தி இளைஞர்களை ஒடுக்குவதற்குப் பதிலாக, முன்னுதாரணமான மக்கள் வாழ்க்கையை உருவாக்க நேச கரங்கள் நீட்டப்பட்டு இளைஞர்கள் வலுவூட்டப்பட வேண்டும் எனவும்,இது ஐக்கிய மக்கள் சக்தியின் கொள்கை எனவும் எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார்.

ஜனாதிபதியின் தள்ளாடும் பாலத்தை ராஜபக்சக்களும்,ராஜபக்ச குமரர்களும்,ராஜபக்ச அடிமைகளும் கடந்து,தற்போது தமது தேவைக்கேற்பத் தேர்தல் முறையை சீர்திருத்த முயல்கின்றனர் எனவும்,உள்ளூராட்சி வேலைத்திட்ட சட்டக அமைப்பை மாற்றியமைக்க முயல்கிறார்கள் எனவும்,8000 மாகாண சபை உறுப்பினர்களை உருவாக்கிய தற்போதைய ஜனாதிபதி அதனை 4000 ஆகக் குறைக்க முயற்சிக்கின்றார் எனவும்,அவ்வாறு உறுப்பினர்களின் எண்ணிக்கையைக் குறைப்பதற்குப் பதிலாக,இந்த அமைப்பை இன்னும் வினைத்திறனாக மாற்றியமைக்க வேண்டும் எனவும்,25 சதவீத பெண்களின் பங்கேற்பை வழங்குவதற்கு பதிலாக,இளைஞர்களுக்கும் சில குறிப்பிட்டளவு வேட்புமனுக்கள் ஒதுக்கப்பட வேண்டும் எனவும் தெரிவித்த எதிர்க்கட்சித் தலைவர்,இவற்றையெல்லாம் செய்வதற்கு முன்னர்,மக்கள் கேட்டுக்கொண்டிருக்கும் மக்கள் சார்,புதிய அரசாங்கத்தை அமைப்பதற்கான ஆணையை வழங்குமாறும்,பல்வேறு ஏமாற்று சூட்சுமங்களை கையாள்வதை விடுத்து,பதவிகளுக்கு ஆட்களை மாற்றாமல், சங்கீதக்கதிரைப் போட்டி நடத்தாமல்,நாட்டு மக்கள் கோரும் புதிய அரசாங்கத்தை ஸ்தாபிக்கத் தேவையான தேர்தலொன்றை நடத்துமாறும் அவர் தெரிவித்தார்.

ஐக்கிய மக்கள் சக்தியின் கம்பளைத் தேர்தல் தொகுதிக் கூட்டத்தில் நேற்று(12) கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

## இலங்கைத் தமிழ் மக்களைப் பாதுகாக்க வேண்டிய

நலனையும் கருத்திற் கொண்டு எங்களுடைய மக்களுடைய நலனிலும் கருத்திற் கொண்டு, ஒரு ஆக்கபூர்வமான தீர்வுத்திட்டத்தை முன்வைக்க வேண்டும் என்பதை வலியுறுத்துகின்றேன். என தமிழ் தேசிய மக்கள் முன்னனியின் தேசிய அமைப்பாளர் தருமலிங்கம் சுரேஸ் தெரிவித்தார். மட்டக்களப்பு கொக்கட்டிச்சோலை படுகொலை தினைத்தை நினைவு கூர்ந்ததற்காக கொக்கட்டிச்சோலைப் பொலிசாரால் மட்டக்களப்பு நீதவான் நீதிமன்றில் தொடரப்பட்ட வழங்கில் வியாழக்கிழமை(13) தருமலிங்கம் சுரேஸ் ஆஜராகியிருந்தார். இதன்பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார். இதன்போது அவர் மேலும் குறிப்பிடுகையில்...

வருடாந்தம் ஜனவரிமாதம் கொக்கட்டிச்சோலை படுகொலை தினம் அனுஸ்ட்டிப்பது வழமையாகும். கிழக்கிலே நடந்தேறிய இனப்படுகொலைகளிலே கொக்கட்டிச்சோலைப் படுகொலை தினத்தை நாம் வருடாந்தாம் நினைவுகூர்ந்து வருகின்றோம். அரசாங்கம் படுகொலை தினங்களை நினைவு கூருபவர்களை அச்சுறுத்துவதன்மூலம் வடக்கு கிழக்கிலேதமிழ்மக்களுக்குநடந்தஅனியாயங்களை மூடி மறைப்பதற்காக எடுக்கப்படுகின்ற காத்திரமான செயற்பாடாகவுள்ளது. கடந்தகாலங்களிலே எமது மக்களுக்கு மேற்கொள்ளப்பட்ட இனப்படுகொலைகள் கிழக்கு மாகாணத்திலே உச்சக்கட்டமாக இருந்தது. மக்கள் தமது இறந்த உறவுகளை நேரில் சென்று நினைவேந்தல்களைச் செய்கின்றபோது, அவர்களை மிரட்டி அந்நிகழ்வுகளை அவர்களைச் செய்யவிடாது, தொடற்சியாக அடக்குமுறைக்குள் வைத்திருப்பதற்காக அரசாங்கம் செய்து வருகின்றது.

மீண்டும் எமது மண்ணில் இவ்வாறான படுகொலைகள் இடம்பெறக்கூடாது, தொடரந்தும் அடக்கு முறைகளும், இடம்பெறக்கூடாது என்பதற்காகவே நாம் இவ்வாறான நினைவேந்தல் நிகழ்வுகளைச் செய்து வருகின்றோம். இவ்வாறான நினைவேந்தல்கள் ஊடாக நாம் எமக்கு நடந்த சம்பவங்களை சர்வதேச சமூகத்திற்குத் தெரியப்படுத்தி வருகின்றோம். ஆனால் சர்வதேச சமூகம் கண்மூடித்தனமாக எமது மக்களுக்கு நடந்திருக்கின்ற இனப்படுகொலைகள் தொடர்பாக மாறி மாறி வருகின்ற அரசாங்கங்களைப் பாதுகாத்து வருகின்றது.

இந்தஆண்டுஐ.நா.மனிதஉரிமைபேரவையில் கொண்டு வரப்பட்ட 51 ஒன்று பிரேரணை என்பது ஒரு வலுவற்ற பிரேரணையாகும். அதனால் எமது மக்களுக்கு எதுவித பிரஜோசனமுமில்லை. பொறுப்புக்கூறல் விடையத்தில் சர்வதேச நீதிமன்றிற்குக்கொண்டுசென்றுசர்வதேசவிசாரணை நடாத்தப்படுவதன் மூலம்தான் தமிழ் மக்கள் இந்த தீவிலே வாழ்வதற்கான நிம்மதியை ஏற்படுத்தலாம். இல்லையேல் இவ்வாறான அடக்குமுறைக்கள் தொடரும். அமக்கு பிடியாணையை ஏற்படுத்திவிட்டு எம்மைப் பயம் காட்டும் செயலில் அரசு இவ்வாறான செயிலில் ஈடுபட்டு வருகின்றது. இதனை சர்வதேச சமூகம் உற்றுநோக்க வேண்டும். குறிப்பாக இந்தியாக இவ்விடையங்களைக் கருத்திற்கொள்ள வேண்டும். இலங்கையிலுள்ள தமிழ் மக்களைப் பாதுகாக்க வேண்டிய மிகப் பெரிய பொறுப்பு இந்தியாவிற்கு இருக்கின்றது. ஆனால் தங்களுடைய நாட்டின் நலனை மாத்திரம் வைத்துக் கொண்டு கடந்த காலங்களிலிருந்து இந்தியா செயற்பட்டு வருகின்றது. ஐ.நா.மனித உரிமை யேரவையில் இந்தியா செயற்பட்ட விதத்தை தமிழ் மக்கள் ஏற்றுக்கொள்ள முடியாத ஒன்றாக இருக்கின்றது. இந்தியாவை நாங்கள் வெறுக்கவில்லை, இந்தியா தங்களுடைய நலனைம் கருத்திற்கொண்டு எங்களுடைய மக்களுடைய நலனிலும் கருத்திற்கொண்டு, ஒரு ஆக்கபூர்வமான தீர்வுத்திட்டத்தை முன்வைக்கவேண்டும் என்பதை வலியுறுத்துகின்றேன். என அவர் இதன்போது தெரிவித்தார்.

## எனது பதிவின் மூலம் சம்மந்தனின்

இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிபோதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார். இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில்,

இவ்விடயம் தொடர்பில் விசாரணைக்காக கடந்த 04.10.2022 அன்று பாராளுமன்றத்திற்கு அழைக்கப்பட்டு பாராளுமன்ற ஒழுக்கவியல் மற்றும் சிறப்புரிமைக் குழுவில் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டிருந்தேன். பாராளுமன்ற ஒழுக்கவியல் மற்றும் சிறப்புரிமைக் குழுவின் தவிசாளர் விஜயதாச ராஜபக்ச முன்னிலையில் இடம்பெற்ற விசாரணையில் என்னுடைய முகப்புத்தகப் பதிவில் வெளியிடப்பட்ட வீடியோ மூலம் பாராளுமன்ற உறுப்பினரின் சிறப்புரிமை மீறப்பட்டுள்ளதாக பாராளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் குறிப்பிட்டார். பாராளுமன்ற உறுப்பினர்களுக்கான சிறப்புரிமை மற்றும் அதை மீறுவோருக்கான சட்ட ஏற்பாடுகள் குறித்து குழுவின் தவிசாளர் விஜயதாச ராஜபக்ச எனக்கு தெளிவுபடுத்தியிருந்தார். சிறப்புரிமை மீறப்பட்டுள்ளமையினை ஏற்றுக்கொண்ட நான் அதற்கு மன்னிப்பும் கோரியிருந்தேன்.

நான் ஒரு கட்சியின் உறுப்பினர் என்கின்ற ரீதியில் அரசியல் கருத்து சுதந்திரத்தின் அடிப்படையில் சம்மந்தன் அவர்கள் பாராளுமன்றத்திற்கு வருகை தரும்போது கைத்தாங்கலாக அழைத்து வரப்பட்டமையினை சுட்டிக்காட்டி பாராளுமன்ற உறுப்பினர் பதவியினை இளையவர் ஒருவருக்கு வழங்கலாம் எனவும், எனது கருத்தை பதிவு செய்திருந்தேன். பாராளுமன்ற உறுப்பினர்களின் சிறப்புரிமை தொடர்பிலும் அது தொடர்பான சட்ட ஏற்பாடுகள் தொடர்பிலும் எனக்கு மட்டுமல்ல பொது மக்களுக்கும் தெளிவு இல்லை. பாராளுமன்றத்தில் வீடியோ எடுக்கப்பட்டது இது முதல் தடவையல்ல பல தடவைகள் இவ்வாறு வீடியோக்கள் எடுக்ககப்பட்டுள்ளன. உதாரணமாக பாராளுமன்றத்தில் மிளகாய்த்தூள் வீசப்பட்ட சம்பவத்திதை வீடியோவாகப் பதிவு செய்யப்பட்டு ஊடகங்களில் காட்சிப்படுத்தப்பட்டன. அப்போது வீடியோ பதிவு செய்தவருக்கு எதிராக இவ்வாறான சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்பபட்டிருந்தால் ஊடகங்கள் வாயிலாக எனக்கும் தெளிவு கிடைத்திருக்கும் என்பதையும் சுட்டிக்காட்டியிருந்ததுடன் பாராளுமன்ற உறுப்பினர்களின் சிறப்புரிமை தொடர்பில் போதிய தெளிவின்மையினால் குறித்த வீடியோவை பதிவு செய்தமைக்காக மன்னிப்பையும் கோரியிருந்தேன். பின்னர் இருசாராரும் இணக்கப்பாட்டிற்கு வந்திருந்தோம். எனது பதிவின் மூலம் சம்மந்தனின் சிறப்புரிமை மீறப்பட்டமைக்காக ஊடகங்கள் வாயிலாகவும் மன்னிப்பினைக் கோருகின்றேன்.

என்னுடைய எழுத்துக்கள் இவர்களுடைய அரசியல் நகர்வுகளுக்கு பெரும் சவாலாக இருப்பதனால் எனது குரலை நசுக்குவதற்காக எடுக்கும் முயற்சியே இது. தொடர்ச்சியாக நான் அச்சுறுத்தப்பட்டு வருகின்றேன். தேர்தல் முடிவுற்று மூன்று மாதங்களின் பின்னர் மட்டக்களப்பு கச்சேரிக்கு முன்னால் பாராளுமன்ற உறுப்பினர் சாணக்கியன் என்னை சந்தித்திருந்தார் “நீங்கள் எனக்கு எதிராக அதிகமாக எழுதுகின்றீர்கள் உங்களுக்கு குடும்பம் பிள்ளைகள் இருக்கு பார்த்து நடந்துகொள்ளுங்கள்” என மிரட்டும் தொணியில் கூறிவிட்டுச் சென்றார். அதன் பின்னர் பல ஊடகவியலாளர் சந்திப்புக்களில் எனது பெயரைக் குறிப்பிடாமல் முகப்புத்தகத்தில் ஒருவர் ஊடகவியலாளர் என்று சொல்லிக்கொண்டு எனக்கு எதிராக செயற்படுகின்றார் என குறிப்பிட்டிருந்தார். தமிழரசுக் கட்சி சார்ந்தவர்கள் தங்களுக்கு ஆதரவாக செயற்படாத ஊடகவியலாளர்களையும், தங்களுக்கு எதிராக செயற்படுபவர்களையும் அடக்கும் செயற்பாடுகளை தொடந்தும் முன்னெடுத்து வருகின்றனர் ஊடக சுதந்திரம், ஊடக அடக்குமுறை கருத்துச் சுதந்திரம் என மேடைக்கு மேடை பேசும் இவர்கள் தற்போது கருத்து சுதந்திரத்தினை அடக்க முற்ப்படுகின்றனர். சிறப்புரிமை என்பது பாராளுமன்ற உறுப்பினர் சம்மந்தனுக்கு மட்டுமானது அல்ல ஏனைய பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் உண்டு. மட்டக்களப்பில் தமிழரசுக் கட்சியின் பல உறுப்பினர்கள் ஏனைய பாராளுமன்ற உறுப்பினர்களை மிகக் கீழ்த்தரமாக விமர்சித்துவருகின்றனர் பாதிக்கப்படுகின்ற பாராளுமன்ற உறுப்பினர்கள் சிறப்புரிமையினை மீறி விமர்சித்தவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்க முடியும். பாராளுமன்ற சிறப்புரிமை மற்றும் அது தொடர்பிலான சட்ட ஏற்பாடுகள் தொடர்பில் பொது மக்களுக்கு தெளிவில்லை எனவும் அவர் இதன்போது குறிப்பிட்டார்.

## அரசு இரண்டு இலட்சம் ரூபா தரவேண்டிய அவசியம் இல்லை மாறாக நாங்கள் நான்கு இலட்சம் ரூபா தருகின்றோம்

### தலைவி மனுவேல் உதயச்சந்திரா

( வாஸ் கூஞ்ஞ)

காணாமல் ஆக்கப்பட்ட எங்கள் பிள்ளைகளுக்கு அரசு இரண்டு இலட்சம் ரூபா தரவேண்டிய அவசியம் இல்லை. மாறாக நாங்கள் நான்கு இலட்சம் ரூபா தருகின்றோம் ஆனால் நீங்கள் வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட எங்கள் பிள்ளைகளுக்கு என்ன நடந்தது என வெளிப்படையாகச் தெரிவியுங்கள் என மன்னார் மாவட்டத்தின் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் சார்பாக இதன் தலைவி மனுவேல் உதயச்சந்திரா இவ்வாறு தெரிவித்தார். மன்னார் மாவட்டத்தின் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் சார்பாக இதன் தலைவி மனுவேல் உதயச்சந்திரா வியாழக்கிழமை (13.10.2022) ஊடகச் சந்திப்பின்போது தொடர்ந்து மேலும் தெரிவிக்கையில் இன்றைய ஜனாதிபதி வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்காக அவர்களின் உறவினர்களுக்கு இரண்டு இலட்சம் ரூபாவும் அத்துடன் மரண சான்றிதழ்களும் தருவதாக தெரியப்படுத்தியுள்ளார்.

இவ்விடயம் எமக்கு எற்கனவே தெரிவிக்கப்பட்ட விடயமே அதாவது ஒரு இலட்சம் ரூபா தருவதாக அன்று தெரிவிக்கப்பட்டது. இது சுமார் நான்கு வருடங்களுக்கு முன் எமக்கு தெரியப்படுத்தப்பட்டது.. இதற்கான வட்டியுடன்தான் தற்பொழுது நான்கு இலட்சமாக இது மாறியுள்ளது. இன்றைய ஜனாதிபதிக்கு எங்கள் விடயம் முழுதும் நன்கு தெரியும். எங்கள் பிள்ளைகள் காணாமல் ஆக்கப்பட்டதும் பிரச்சனைகளுக்கு ஒரு காரணகத்தாவாக இருப்பவரும் இன்றைய ஜனாதிபதியும்தான். ஆட்சிபீடம் ஏறுகின்ற எந்த அரசும் பாதிக்கப்பட்ட எங்களுக்காக எங்கள் பிரச்சனைகளை தீர்ப்பதில் செயல்படவில்லை. ஆனால் இந்த அரசுகள் தங்கள் மக்களையும் தங்கள் இராணுவத்தையும் போர் குற்றங்களை செய்தவர்களுக்கு ஆதரவு வழங்கும் அரசாங்களாகவே காணப்படுகின்றன. தொடர்ந்து அவர்களுக்கு பாதுகாப்பு வழங்குவதிலேயே அரசு செயல்பட்டுக் கொண்டு இருக்கின்றது.

இன்று காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் இரண்டாயிரத்துக்கு மேற்பட்ட நாட்களாக தொடர்ந்து வீதியில் தங்கள் பிள்ளைகளுக்காக ஏங்கிக் கொண்டு இருப்பதை கவனத்தில் எடுக்கப்படாமல் பாராமுகமாக இருக்கின்றது அரசு இவர்களிடம் நாங்கள் எங்கள் பிள்ளைகளுக்காக நிதி கேட்டு நிற்கவில்லை. கையில் ஒப்படைக்கப்பட்ட பிள்ளைகளுக்கு என்ன நடந்தது என்றுதான் கேட்டு நிற்கின்றோம். ஏற்கனவே இது தொடர்பாக எத்தனையோ ஆணைக்குழுவை நியமித்திருந்தனர் இப்பொழுது இந்த ஜனாதிபதி இன்னொரு ஆணைக்குழுவை நியமிக்கின்றார். இந்த ஆணைக்குழு முதலில் மட்டக்களப்பில் விசாரனையை ஆரம்பிக்கப் போகின்றதாம். விசாரனையை விடுத்து பிள்ளைகளுக்கு என்ன நடந்தது என்று சொல்லுங்கள் அல்லது பிள்ளைகளை கொன்று விட்டோம் என வெளிப்படையாக கூறுங்கள். உலக நாட்டையும் எங்களையும் தொடர்ந்து ஏமாற்றாதீர்கள். நீங்கள் இரண்டு இலட்சம் ரூபா தருவதாக தெரிவிக்கின்றீர்கள் எங்களுக்கு பணம் வேண்டாம் நாங்கள் உங்களுக்கு நாலு இலட்சம் ரூபா தருகின்றோம் எங்கள் பிள்ளைகளின் நிலையைச் சொல்லுங்கள். நாங்கள் எங்கள் பிள்ளைகளுக்காகவும் நீதிக்காகவுமே தெருக்களில் நின்று குரல் கொடுக்கின்றோம். நீங்கள் ஒரே நாடு ஒரே மக்கள் என்று சொல்லுவதெல்லாம் பொய் என்பது புலனாகின்றது சிறுபான்மையினர் மாற்றாந்தாய் பிள்ளைகளாகவே எண்ணிக் கொண்டு இருக்கின்றீர்கள்.

# அருந்ததி

இணைய திருமண சேவை

Since 2014

## அருந்ததி

இணைய திருமண சேவை

**www.arunthathee.com**
**+94 777 164 524**

### மணமகன் விபரம் (மணமகள் தேவை)

**25039 | ப + க | 1985**
மானிப்பாய் | இந்து
MBBS | Doctor
பூராடம் (தனுசு)
170 செ.மீ | செவ்: 01

**21792 | வே | 1993**
மானிப்பாய் | இந்து |Diploma
Medical Executive
திருவோணம் (மகரம்)
180 செ.மீ

**21957 | வே | 1991**
வேலணை | இந்து | BSc
Quantity Surveyor
திருவாதிரை (மிதுனம்)
170 செ.மீ | செவ்: 12

**21903 | வே | 1993**
மூளாய் | இந்து | BSc
IT Trainee
பூசம் (கடகம்)
170 செ.மீ

**24619 | வே | 1990**
யாழ்ப்பாணம் | கத்தோலிக்கம்
BD | Team Leader
சுவாதி (துலாம்)
170 செ.மீ

**21855 | வே | 1991**
உரும்பிராய் | இந்து | A/L
Associate Manager
பூரட்டாதி (கும்பம்)
175 செ.மீ

**25069 | வே | 1986**
பருத்தித்துறை | இந்து | BA
CIMA | Accountant
மூலம் (தனுசு)
170 செ.மீ | செவ்: 08

**21795 | வே+கோ | 1995**
கோப்பாய் | இந்து | A/L
Cashier | ஜேர்மனி
பூரம் (சிம்மம்)
167 செ.மீ | செவ்: 12

**24955 | சா | 1992**
ஆனைக்கோட்டை | இந்து
Own Business
சித்திரை (துலாம்)
187 செ.மீ

**23851 | வே | 1976**
அச்சுவேலி | இந்து | A/L
Own Business
சுவாதி (துலாம்) | Canada
172 செ.மீ | சூ.செவ்: 04

**22549 | வே | 1988**
காரைநகர் | இந்து | B.Eng
Mechanical Engineer
கார்த்திகை (ரிஷபம்)
165 செ.மீ

**25048 | வே | 1991**
கோப்பாய் | இந்து | Master
Degree | Banker
சித்திரை (கன்னி)
177 செ.மீ | சூ.செவ்: 06

**22230 | வே | 1988**
கொக்குவில் | இந்து
Diploma | Receptionist
சுவாதி (துலாம்) | France
167 செ.மீ | செவ்: 02

**22224 | வே | 1988**
திருநெல்வேலி | இந்து | BSc
Exe.Mechanical Engineer
கேட்டை (விருச்சிகம்)
170 செ.மீ | Singapore

**21912 | வே | 1990**
கொக்குவில் | இந்து | MSc
Software Engineer
திருவோணம் (மகரம்) | ஜேர்மனி
180 செ.மீ | Divorced

**22179 | வே | 1990**
சாவகச்சேரி | இந்து | HNDM
Reagional Manager
உத்தராடம் (தனுசு)
192 செ.மீ | செவ்: 04

**21996 | வே | 1990**
நெல்லியடி | கத்தோலிக்கம்
BSc | Engineer
187 செ.மீ

**22068 | வே | 1990**
சாவகச்சேரி | இந்து | BSc
Software Engineer
மகம் (சிம்மம்)
180 செ.மீ | செவ்: 04

**21891 | வே | 1992**
காரைநகர் | இந்து | BSc
Software Engineer
பூரட்டாதி (மீனம்) | USA
186 செ.மீ | செவ்: 07

**22146 | வே | 1993**
வேலணை | இந்து
BSc | Lecturer
பூரட்டாதி (கும்பம்)
165 செ.மீ | செவ்: 04

### மணமகள் விபரம் (மணமகன் தேவை)

**22264 | கோ | 1987**
கரவெட்டி | இந்து | Msc
Civil Engineer
பூரட்டாதி (கும்பம்)
160 செ.மீ

**21711 | வே | 1990**
நல்லூர் | இந்து
MBBS | Doctor
சதயம் (கும்பம்)
162 செ.மீ

**21645 | கோ | 1996**
புளியங்கூடல் | இந்து | A/L
Pharmacy Assistant
உத்தரம் (சிம்மம்)
165 செ.மீ

**22261 | வே | 1996**
ஈச்சமோட்டை | RC | Diploma
Accounts Assistant
சுவாதி (துலாம்)
157 செ.மீ | செவ்: 12

**22164 | வே | 1998**
காரைநகர் | இந்து | A/L
Student (BSc)
திருவாதிரை (மிதுனம்)
152 செ.மீ | செவ்: 08

**22258 | கு | 1987**
முல்லைத்தீவு | இந்து | MBBS
MD | Doctor
மகம் (சிம்மம்)
164 செ.மீ

**22167 | சா | 1991**
பண்டத்தரிப்பு | இந்து | BA
Development Officer
பூரம் (சிம்மம்)
165 செ.மீ | சூ.செவ்: 09

**21882 | வே | 1992**
மீசாலை | இந்து | BD
Regulatory Affairs
Specialist | மகம் (சிம்மம்)
160 செ.மீ | France | செவ்: 02

**21831 | வே | 1995**
திருநெல்வேலி | இந்து
A/L | Junior Executive
கேட்டை (விருச்சிகம்)
146 செ.மீ | செவ்: 01

**22053 | தே | 1992**
மாத்தளை | இந்து
BD | PGD | Doctor
உத்தரம் (கன்னி)
157 செ.மீ | செவ்: 08

**21966 | கு | 1988**
காங்கேசன்துறை | இந்து
MBBS | Doctor
சுவாதி (துலாம்)
152 செ.மீ | செவ்: 02

**21675 | கு | 1992**
பருத்தித்துறை | கத்தோலிக்கம்
A/L | Teacher
மிருகசீரிடம் (மிதுனம்)
152 செ.மீ | செவ்: 08

**21738 | கோ | 1992**
கரவெட்டி | இந்து | PD
Lab Incharge | UK
உத்தராடம் (மகரம்)
172 செ.மீ | செவ்: 12

**25075 | வா.செ | 1992**
ஆனைக்கோட்டை | இந்து
Diploma | Teacher
மகம் (சிம்மம்)
174 செ.மீ

**22101 | கோ | 1995**
மூளாய் | இந்து | MBBS
Lecture & Consultant
ரேவதி (மீனம்)
165 செ.மீ | செவ்: 12

**22657 | வே | 1991**
கொக்குவில் | இந்து
Student (Music course)
ரேவதி (மீனம்)
162 செ.மீ

**25036 | அ | 1993**
கொழும்பு | இந்து | Diploma
Senior Business Analyst
அத்தம் (கன்னி)
162 செ.மீ

**25006 | இ.வே | 1993**
அளவெட்டி | இந்து
BSc | Nurse | UK
உத்தரட்டாதி (மீனம்)
158 செ.மீ

**22206 | கோ | 1993**
அச்சுவேலி | இந்து
A/L | Job Seeker
சதயம் (கும்பம்)
157 செ.மீ | செவ்: 01

**21930 | கோ | 1999**
அல்வை | இந்து
ACCA | Executive
மூலம் (தனுசு)
170 செ.மீ | செவ்: 12


## அருந்ததி பிரைவட் லிமிடட்

18, ராமகிருஸ்ணா அவினியு, வெள்ளவத்தை | 20 கே.கே.எஸ் வீதி கொக்குவில்

# தம்பலகாமம் ஊர்ப்பெயர் வரலாற்று ஆய்வு நூல் வெளியீட்டு விழா

**(அ . அச்சுதன்)**

வைத்தியர் த. ஜீவராஜ் அவர்களின் தம்பலகாமம் ஊர்ப்பெயர் ஆய்வு என்ற வரலாற்று ஆய்வு நூல் திருகோணமலை நகரசபை மண்டபத்தில் 16.10.2022 ஞாயிற்றுக்கிழமை காலை 10.30 மணிக்கு வெளியீடு செய்யப்படவுள்ளது. தம்பலகாமம் பிரதேச செயலாளர் திருமதி




ஜே. ஸ்ரீபதி அவர்களின் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் முதன்மை விருந்தினராக திருகோணமலை மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் ஜே.எஸ் அருள்ராஜ் அவர்களும், சிறப்பு விருந்தினராக திருகோணமலை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் வி. பிரேமானந் அவர்களும் கலந்து சிறப்பிக்க உள்ளனர். இந்நிகழ்வில் வெளியீட்டு உரையினை கலாபூசணம் வே. தங்கராசா அவர்களும், அறிமுக உரையினை கலாநிதி இ. ஸ்ரீஞானேஸ்வரன் அவர்களும், நூல் தொடர்பான கருத்துரையினை சற்குணம் சத்யதேவன் அவர்களும் நிகழ்த்த உள்ளனர். இந்நிகழ்வினை கவிஞர் தில்லைநாதன் பவித்திரன் அவர்கள் தொகுத்து வழங்க இருக்கிறார். வரலாற்று ஆர்வலர்கள் அனைவரையும் இந்நிகழ்வில் கலந்து சிறப்பிக்குமாறு ஏற்பாட்டுக் குழுவினர் அன்புடன் அழைக்கின்றனர்.

# அரசால் தெரிவிக்கப்பட்ட சலுகைகள் நடைமுறைகளுக்கு வரவில்லை

**( வாஸ் கூஞ்ஞ)**

விவசாயிகள் தொடர்பாக அன்மையில் அரசால் தெரிவிக்கப்பட்ட சலுகைகள் எந்த விடயமும் நடைமுறைகளுக்கு வரவில்லை. மன்னார் மாவட்ட விவசாயிகள் பெரும் ஏமாற்றத்துடன் காணப்படுகின்றனர் என மன்னாரில் இடம்பெற்ற விவசாயக் கூட்டத்தில் பிரஸ்தாபிக்கப்பட்டது. மன்னார் மாவட்டத்தில் பிரதான குளமாகக் காணப்படும் கட்டுக்கரைக்குளத்தின் கீழ் நடப்பு வருடமாகிய 2022 – 2023 மேற்கொள்ளப்படும் காலபோக நெற் செய்கை தொடர்பான கூட்டம் மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி ஸ்ரான்லி டிமெல் தலைமையில் உயிலங்குளத்தில் புதன்கிழமை (12.10.2022) இடம்பெற்றது. இக் கூட்டத்தில் மன்னார் மாவட்ட விவசாயிகளின் பிரதிநிதிகள் பிரஸ்தாபிக்கையில் கடந்த காலபோக விவசாய நெற்செய்கையில் அரசானது இரசாயன பசளை விநியோகத்தை இடைநிறுத்தி அனைத்து விவசாயிகளும் சேதன பசளையை பயன்படுத்தியே நெற்செய்கையை முன்னெடுக்க வேண்டும் என வலியுறுத்தி இருந்தது.

இதன் காரணமாக மன்னார் மாவட்ட்தில் அதிகமான விவசாயிகள் பெரும் பாதிப்புகளுக்கு உள்ளாகி இருந்தனர். இதில் பாதிப்படைந்த விவசாயிகளுக்கு நஷ்டஈடு வழங்கப்படும் என அரசு அன்று தெரிவிந்திருந்தது. ஆனால் இன்று வரை அது நடைமுறைக்கு வராது இருக்கின்றது. இவ்வாறு வங்கிகளில் விவசாயக் கடன் பெற்றவர்களுக்கு இவ் கடன் தள்ளுபடி செய்யப்படும் என அரசால் தெரிவிக்கப்பட்டிருந்தது. ஆனால் இதுவும் விவசாயிகளுக்கு ஒரு ஏமாற்றமாகவே இருந்து வருகின்றது. என இவ் கூட்டத்தில் விவசாயிகளின் பிரதிநிதிகள் கவலை தெரிவித்தனர்.

# ஊடகவியலாளர்களுக்கான அனர்த்த முகாமைத்துவ பயிற்சி செயலமர்வு

**(நூருள் /ஹுதா உமர், எஸ். அஷ்ரப்கான், சியாத் எம். இஸ்மாயில், சர்ஜூன் லாபீர்)**

அம்பாறை மாவட்ட அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் ஏற்பாட்டில் அனர்த்த முகாமைத்துவத்தில் ஊடகவியலாளர்களின் பங்குகள் தொடர்பிலான கலந்துரையாடலும், செயலமர்வும் இன்று (13) அம்பாறை தனியார் விடுதியில் அனர்த்த முகாமைத்துவ நிலைய அம்பாறை மாவட்ட உதவி பணிப்பாளர் எம்.ஏ.சி. றியாஸ ின் நெறிப்படுத்தலில் இடம்பெற்றது. இந்த செயலமர்வை அம்பாறை அரசாங்க அதிபர் ஜே. எம்.ஏ. டக்ளஸ் கலந்து கொண்டு ஆரம்பித்து வைத்தார். இந்நிகழ்வில் வளவாளர்களாக அனர்த்த முகாமைத்துவ நிலைய பணிப்பாளர் சுகத் திஸாநாயக்க, அம்பாறை மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் வீ. ஜெகதீசன், முகாமைத்துவ நிலைய அம்பாறை மாவட்ட உதவி பணிப்பாளர் எம்.ஏ.சி. றியாஸ், வளிமண்டலவியல் திணைக்கள உதவிப்பணிப்பாளர் துலாரி பெர்னாண்டோ, மாவட்ட உத்தியோகத்தர் ஏ.எம். பிரோஸ், அனர்த்த முகாமைத்துவ நிலைய ஊடகப்பிரிவின் உதவிப்பணிப்பாளர் ஜானக ஹெதுன் பதிரஜ ஆகியோர் கலந்து கொண்டு அனர்த்தங்கள் தொடர்பிலும், அபாய எச்சரிக்கை தொடர்பிலும், முன்னாயத்த விடயங்கள் தொடர்பிலும் இவற்றில் ஊடகங்களின் பங்களிப்பும், ஊடகவியலாளர்களின் சேவைகள் தொடர்பிலும் விரிவுரை நிகழ்த்தினர். இந்நிகழ்வில் அம்பாறை மாவட்டத்தின் பல பிரதேசங்களையும் சேர்ந்த மும்மொழி ஊடகங்களிலும் கடமையாற்றும் ஊடகவியலாளர்கள் கலந்து கொண்டனர்.

# பேரிடர் அபாயக் குறைப்பு தினத்தை முன்னிட்டு விழிப்பூட்டல் நிகழ்வு






**வவுணதீவு நிருபர்-**

பேரிடர் அபாயக் குறைப்பு தினத்தை முன்னிட்டு மட்டக்களப்பு மண்முனை மேற்கு பிரதேசத்தில் வாழ்வகம் விஷேட தேவையுடையோர் அமைப்பினால் விழிப்பூட்டல் நிகழ்வும் மரநடுகையும் இன்று (13)இடம் பெற்றது. வாழ்வகம் விஷேட தேவையுடையோர் அமைப்பினால் தலைவர் வா.பாலகப்போடி தலைமையில் வவுணதீவு சந்தியிலிருந்து ஆரம்பமான விழிப்பூட்டல் ஊர்வலம் வாழ்வகம் அலுவலகம் வரை சென்று அங்கு நிகழ்வுகளும் மரநடுகையும் இடம் பெற்றது.

பேரிடர் அனர்த்த அபாயக் குறைப்பு தொடர்பான உரைகளும் விழிப்புணர்வுகளும் இதன்போது இடம்பெற்றது. வாழ்வகம் அமைப்பின் வெளிக்கள உத்தியோகத்தர் அருள்ராஜா ஒருங்கிணைப்பில் இந் நிகழ்வுகள் இடம் பெற்றது. இந்நிகழ்வில் மண்முனை மேற்கு பிரதேச செயலாளர் எஸ்.சுதாகர், உதவி பிரதேச செயலாளர் சுபா சதாகரன், வை.எம்.சி.ஏ நிறுவனத்தின் திட்ட இணைப்பாளர் அன்பழகன், கமிட் நிறுவனத்தின் திட்டப் பணிப்பாளர் காண்டீபன் மற்றும் பிரதேச சபை உத்தியோகத்தர்கள், பிரதேச செயலக உத்தியோகத்தர்கள், வாழ்வகம் அமைப்பின் உறுப்பினர்கள் என பலர் கலந்து கொண்டனர்.



நிதியுதவி
NH INVESTMENT & SECURITIES

சுபீட்சம்
supeedsam@gmail.com
supeedsam.com
வியாழக்கிழமை
சுபீட்சம் 13 அக்டோபர் 2022


# குருக்கள்மடம் கலைவாணி வாசகர் வட்டத்தின் பரிசளிப்பு விழா

(ரக்ஸனா)



தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்டு மட்டக்களப்பு மாவட்டம் குருக்கள்மடம் கலைவாணி வாசகர் வட்டம் நடாத்திய பரிசளிப்பு விழா வாசகர் வட்டத் தலைவர் சி.விவேகானந்தம் தலைமையில் குருக்கள்மடம் பொது நூலகத்தில் புதன்கிழமை(12) நடைபெற்றது. இதன்போது கடந்த வருடம் இடம்பெற்ற புலமைப்பரிசில் பரீட்சையில் வெட்டுப்புள்ளிகளுக்குமேல் பெற்ற மாணவர்களுக்கான பரிசில்கள் வழங்கப்பட்டதோடு, மாணவர்களின் கலை நிகழ்வுகளும், அரங்கேறின. மண்முனை தென் எருவில் பற்று பிரதேச சபை தவிசாளர் ஞா.யோகநாதன், திறந்த பல்கலைக்கழகத்தின் சிரேஸ்ட்ட விரிவுரையாளர் க.ஞானரெத்தினம், பிரதேசசபை செயலாளர் தா.அறிவழகன், சனசமூக நிலைய உத்தியோகத்தர் சி.குகநேசன் மற்றும் கிராமத்தின் பல முக்கியஸ்தர்கள் சங்கம், கழகங்கள் என்பவற்றின் தலைவர் என பலரும் இதன்போது கலந்து கொண்டிருந்தனர். 16 வருடங்களாக தனது சொந்த நிதியிலிருந்து தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் வெட்டுப்புள்ளிகளுக்குமேல் பெற்ற மாணவர்களுக்கான விசேட பரிசில்களை வழங்கி வரும் கலைவாணி வாசகர் வட்ட தலைவர் சி.விவேகானந்தம், தவராசா ஜெயசித்ரா ஆகியோரும், இதன்போது கௌரவிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கதாகும்.

# பெரியநீலாவணையில் தீ விபத்து மூன்று மரம் அரியும் ஆலைகள் எரிந்து நாசம்



(ஏ.எல்.எம்.ஷினாஸ்)

அம்பாறை மாவட்டத்தின் கல்முனை மாநகர சபை எல்லைக்குட்பட்ட பெரியநீலாவணையில் உள்ள மரம் அரியும் ஆலையில் இன்று (13) அதிகாலை 1.00 மணியளவில் ஏற்பட்ட தீ விபத்தின் காரணமாக அருகருகே உள்ள மூன்று மரம் அரியும் ஆலைகள் முற்றாக எரிந்து நாசமாகியுள்ளது. சம்பவத்தை அறிந்து ஸ்தலத்திற்கு வருகை தந்த இளைஞர்கள் மற்றும் கல்முனை மாநகர சபையின் தீயணைப்பு பிரிவினர் ஒன்றிணைந்து மேலும் தீ பரவுவதை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தனர். சம்பவம் தொடர்பான விசாரணைகளை பெரியநீலாவணை பொலிசார் முன்னெடுத்துள்ளனர். இந்தத் தீ விபத்து காரணமாக பல லட்சம் ரூபா பெறுமதியான மரம் அரியும் கனரக மோட்டார் இயந்திரங்கள் உட்பட தொழிற்சாலையில் இருந்த மரக்குற்றிகள் மற்றும் மரத் தளபாடங்கள் என அனைத்தும் எரிந்து நாசமாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது.




# கடவுள் மேல் நம்பிக்கை இருந்தால் பொது சேவையை முறையாக செய்யுங்கள்



**கிழக்கு மாகாண ஆளுநர் அனுராதா யஹம்பத்**

**ஹஸ்பர்**

மக்கள் சேவையை முறையாகச் செய்யாமல் இறைவனின் ஆசியை எதிர்பார்க்கக் கூடாது என கிழக்கு மாகாண ஆளுநர் அனுராதா யஹம்பத் தெரிவித்தார். மக்களுக்கு சேவை செய்ய வேண்டியது அரச அதிகாரிகளாகிய நம் அனைவரின் பொறுப்பு என்றும் ஆளுநர் கூறினார். அம்பாறை மாவட்ட பிரதேச செயலக காணி திணைக்களத்தின் பணிகளை வினைத்திறனுடன் முன்னெடுப்பதற்காக UNHCR அமைப்பினால் அம்பாறை அரசாங்க அதிபர் காரியாலயத்தில் நேற்று (12) இடம்பெற்ற தகவல் கணனி வழங்கும் நிகழ்வில் கலந்து கொண்ட போதே ஆளுநர் மேற்கண்டவாறு தெரிவித்தார். மாகாண காணி திணைக்கள ஆணையாளர் அலுவலகத்தின் ஏற்பாட்டில் இந்த கணனிகள் விநியோகம் இடம்பெற்றது.

மேலும் கருத்து தெரிவித்த ஆளுநர்: “அதிகாரிகளாகிய நாம் மக்களின் பிரச்சினைகளை விரைந்து தீர்க்க வேண்டும். அந்தப் பிரச்னைகளைத் தீர்க்கும் பொறுப்பு பிரதேச செயலார்களுக்கு இருக்கிறது. அதனை உணர்ந்து அரச சேவையை சீரழிவின்றி நிறைவேற்றுவது முக்கியம்.எமது மாகாணத்தில் பாரியளவிலான உத்தியோகத்தர்கள் பற்றாக்குறை காணப்படுவதால் சில பிரச்சினைகளுக்கு தீர்வு காண நீண்ட காலம் எடுக்கின்றது. ஆனால், மக்கள் பிரச்சினைகளை விரைவில் தீர்த்து வைத்தால், நம் இதய சாட்சிக்கு நியாயம் கிடைத்திருக்கும். ஒவ்வொருவருக்கும் கடவுள் மேல் நம்பிக்கை இருந்தால் மக்கள் சேவையை முறையாகச் செய்வார்கள் என்றும் ஆளுநர் கூறினார். இந் நிகழ்வில், ஆளுநரின் செயலாளர் எல்.பி. மதநாயக்க, மாகாண காணி ஆணையாளர் பி.எம்.ஆர்.சி. தசநாயக்க, மாகாண வீதி பயணிகள் போக்குவரத்து அதிகார சபையின் தலைவர் சாமர நிலங்க உட்பட பலர் கலந்துகொண்டனர்.

# போரதீவுப்பற்று பிரதேச பெரும்போக ஆரம்பக் கூட்டம்



(ரக்ஸனா)

மட்டக்களப்பு மாவட்டம் போரதீவுப்பற்று பிரதேச பிரிவிக்குட்பட்ட 2022ஃ2023 ஆண்டுகளுக்கான பெரும்போக ஆரம்பக் கூட்டம் புதன்கிழமை (12) போரதீவுப்பற்று கலாச்சார மண்டபத்தில் பிரதேச செயலாளர் ஆர் ராகுலநாயகியின் ஒழுங்கமைப்பில் மாவட்ட அரசாங்க அதிபர் கே.கருணாகரன் அவர்களின் தலைமையில் இடம்பெற்றது. இக்கூட்டத்தில் கலநல சேவை திணைக்களத்தின் வெல்லவெளி கமநல பகுதியில் 500 ஏக்கரும், மண்டூர் கமநல பகுதியில் 560 ஏக்கரும், பழுகாமம் கமநல பகுதியில் 2500 ஏக்கருமாக, மொத்தம் 4560 ஏக்கர் நவகிரி நீர்பாசன திட்டத்தின் கீழும், தும்பங்கேணி நீர்ப்பாசணத்தில் 19082 ஏக்கர் செய்கை பண்ணுவதாக தீர்மானிக்கப் பட்டுள்ளன. இவற்றிற்கான விதை நெல் இனம் **VG 94, AT 362 ,VG 357, AT 307 , VG 300, 374, 373, 308, 360, 358** போன்ற நெல் இனங்கள் விதைப்பது என இதன் போது பரிந்துரைக்கப் பட்டுள்ளது.

விதைப்பற்கு 25.10.2022 தொடக்கம் 20.11.2022 வரையும்காலஅவகாசமும்இக்கூட்டதில்தீர்மானிக்கப்பட்டுள்ளது. இதன் போது மடடக்களப்பு மாவட்ட பராளுமன்ற உறுப்பினர் கோவிந்தன் கருணாகரம், கமநல அபிவிருத்தி திணைக்களம், விவசாய பிரிவு, நீர்பாசன திணைக்களம், விவசாய திணைக்கள பண்ணையாளர்கள் , நீர் பாசன திணைக்கள நவகிரி பிரிவு பொறியியலாளர் , மாகாண நீர்பாசண உத்தியோகத்தர்கள், பிரதேச திணைக்கள அதிகாரிகள், பிரதேச திணைக்கள உத்தியோகத்தர்கள் , வங்கி முகாமையாளர்கள் , பிரதேச விவசாய அமைப்புக்கள் , இதன் போது கலந்து கொண்டனர். மற்றும் காட்டு யானைகளின் பிரச்சினை யானை வேலி அமைப்பது மற்றும் உரமானியம் நெல் சந்தைபடுத்தல் போன்ற விடயங்கள் ஆராயப்பட்டமை குறிப்பிடத்தக்கது.




# கல்முனையில் இரத்ததான முகாம்

(எம்.எஸ்.எம்.ஸாகிர்)

கல்முனை அஷ்ரஃப் ஞாபகார்த்த வைத்தியசாலையின் இரத்த வங்கியில் நிலவும் இரத்தப் பற்றாக்குறையை நிவர்த்திக்கும் முகமாக கல்முனை கல்வி, கலாச்சார மேம்பாட்டு தாபனம் (ECDO நூலகம்) இரத்ததான முகாம் ஒன்றை ஏற்பாடு செய்துள்ளது. இந்த இரத்ததான முகாம் நாளை (15) சனிக்கிழமை காலை 9.00 மணியிலிருந்து மாலை 4.00 மணிவரை கல்முனை – 09, 452டீ பள்ளி ஒழுங்கை எனும் முகவரியில் அமைந்துள்ள நுஊனுழு நூலகத்தில் இடம்பெறவுள்ளது. இவ் உயிர் காக்கும் உயரிய பணியில் ஆண், பெண் இருபாலரும் கலந்து கொண்டு இரத்ததானம் வழங்க முன்வருமாறு ஏற்பாட்டுக் குழுவினர் அழைப்பு விடுத்துள்ளனர்




Main Sponsor — MUBARAK® TEXTILES
Co Sponsor — AZEEF FANCY
Official Sraee Blouse Partners — Mahalaxmi Boutique, RS Designer
Official Photography & Videography — INNOVO STUDIO
Official Sraee Florist Partner — Shan Party professionals

Media Partner — தினகரன், தினமின, Daily News, SUNDAY OBSERVER, வசந்தம் TV, வசந்தம் FM

# மட்டுநகரில் அருந்ததி வழங்கும்
# BRIDAL FASHION SHOW & CAKE EXHIBITION

2014 ஆம் ஆண்டு அருந்ததி தனியார் நிறுவனம் நிறுவப்பட்டதிலிருந்து இன்று வரை திருமண த்தோடு தொடர்புடைய பலதரப்பட்ட துறைகளில் காலடி பதித்து திருமணங்களில் தனக்கென்றவொறு தனியிட த்தைப் பிடித்துள்ளது. அசைக்கமுடியாத பலமான அஸ்திவாரத்தோடு புது புது விடயங்களை அறிமுகம் செய்து நவீன காலத்திற்கேற்றவவாறு தம்மை பதிவேற்றம் செய்துகொண்டிருக்கிறது.

50 இற்கும் மேற்பட்ட அழகுக்கலை நிபுணர்களுடன் இணைந்து பல்வேறு ஊடக, புகைப்பட, ஆடை அலங்கார மற்றும் Aari Work அனுசரைணயாளர்களின் ஒத்துழைப்போடு தனித்துவமாய் நடைபெறும். ஏராளமான பார்வையாளர்களோடு பலரின் எதிர்பார்ப்புகளோடு இதுவரையில் எந்தவொரு நிறுவனமும் ஏற்பாடு செய்திராத மணப்பெண் அலங்காரக் காட்சியை பல இடங்களிலும் நடாத்துவதே அருந்ததியின் குறிக்கோள்.

அந்த வகையில் 2022 கடந்த ஜனவரி 10 ஆம் திகதி கொழும்பு பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்திலும் மார்ச் 10ம் திகதி யாழ்ப்பாணத்திலும் மிகப் பிரம்மாண்டமாக இம் மாற்றுமோதிரம் நிகழ்வு நடைபெற்றது.


**மணப்பெண் அலங்காரக் காட்சி**
**கேக் கண்காட்சி**
**15 ஒக்டோபர் 2022**
**அஞ்சனா கிரேண்ட் பெலஷில்**


இந்த சிறப்பு நிகழ்வானது ஒவ் வொரு மாவட்டத்திலுமுள்ள பெண் முயற்சியாளர்களை இந்த சமூதாயத்திற்கு அறிமுகப்படுத்தும் முயற்சியாக மீண்டுமொரு மாற்று மோதிர நிகழ்வை நடாத்த அருந்ததி நிறுவனம் திட்டமி ட்டுள்ளது. அந்த வகையில் பலரின் நன்மதிப்பையும் நேர்மறையான கருத்துக்களையும் பெற்று வெற்றிப் பாதையில் பயணத்துக்கொண்டிருக்கும் மணப்பெண் அலங்காரக் காட்சி மாற்றுமொரு பிரம்மாண்டத்தோடு எதிர்வரும் ஒக்டோபர் மாதம் 10 ஆம் திகதி மட்டகளப்பு அஞ்சனா கிரேண்ட் பெலஷில் நடைபெறவுள்ளது. பிரதம மற்றும் சிறப்பு அதிதிகளின் வருகையோடு பல பிரதேசங்களில் இருந்தும் சிறப்பு தேர்ச்சி பெற்ற அழகுக்கலை நிபுணர்கள் இதில் பங்கேற்கவுள்ளனர். எதிர்பார்ப்புகளோடு வரும் அனைவரையும் நிச்சயம் இந் நிகழ்வு திருப்திபடுத்துமென்பதில் எவ்வித ஐயமுமில்லை..

## அழகுக்கலை நிபுணர்கள்


அழகுக்கலை சார்பாக கலந்துகொள்ளும் சிறப்பு விருந்தினர்
Kayalvili Jeyaprakash
Salon Nayagara & Academy


PRETTY FEATHERS BEAUTY SALON – DEVI THIYAGU
BLOOMING BEAUTY CARE – A.THARMIKA
HEMA BEAUTY HAIR – A.HEMALATHA
ALEEZA BEAUTY PARLOUR – NUSKA NAHEEM
ANGEL BEAUTI CARE – MITHUJAN SUMITHA



NITHI'S BEAUTY PARLOR – NITHIYA
MIYAH MAKE-UP STUDIO – SNAMIYA ESTHER
ST BEAUTY CARE – SUJEEVAN THARSHIKA
BEAUTY QUEEN MAKEOVER – RUPENTHINI JEGAN
SANCI BEAUTY PARLOUR – PRATHEEPAN SINTHUSHA
PREETY ASVI MACKUP SALON – THAJEEVARAN SUVIKA
NIVE BEAUTY PARLOUR – KIRUSHNAPILLAI NIVETHA
TOUCH OF BEAUTY SALON – GAVASKAR DINISHAA


இனிய தமிழ் மகள் Bridal – ARASARADNAM JUJITHA
IVEHERBALS BEAUTY CARE – IVENTHINI PERINPARAJA
PRAKASHY BRIDAL & BEAUTY CARE – PRAVEENA PRASATH
SALON AYNAH BRIDAL PVT (LTD) – NIROSE NIJAMUDEEN
BRUNTHA BEAUTY PARLOR – PUSHPARATHNAM PIRASHANTHINI
ROYAL VR SALON – RENUKA THENUWARA
SHAKSHI BEAUTY CARE – ANUSHANTHI
SHARU BRIDLE & BEAUTY CARE – S.THATSHAYINI


ADHISHAYAA BRIDAL STUDIO – JENI
SHOMI BEST OF MAKEOVER – KISHOMINA
BLLOSOM BRIDAL COLLECTION – PATHMANATHAN RAJESWARY
PRANI BEAUTY CARE – KOWSALA NADARASA
MSH BEAUTY CARE – MATHANA SURENDRAN
ADASHA BEAUTY CARE – MARAN JENUSHA
SHERLINA BEAUTY SALOON – SURESH SUGANTHY
SHARP LOOK BEAUTY SALOON – RAJITHARAN NELUKA

## கேக் வடிமைப்பாளர்கள்


HESHI CAKE'S – MAYURAN HESHIKA
APR CAKE CREATION – ABISHARIKA PRAVEEN
SWEETART CAKEDESIGN – JEYARASA VARANIYA
EVEREST BAKE HOUSE – SNAMIYA ESTHER SIVALINGAM
CAKES BY YO – YOUVANA SANJEEVAN
SHAL CAKES – SHIYALIN HENDRICK


SHIYA CAKES WORLD – JUDE ANTANY MARY ANUSHIYA
NK CAKE DESIGN – KOPALASAMY NISANTHINI
MADYAN HALAWA BAKE HOUSE – RAFAIDEEN FATHIMA RIZKA

# ஆளுநர் லாகுகல வைத்தியசாலைக்கு திடீர் விஜயம்



**பைஷல் இஸ்மாயில் -**

கிழக்கு மாகாண ஆளுநர் அனுராதா யஹம்பத் அம்பாறை மாவட்ட லாகுகல பிரதேச வைத்தியசாலைக்கு நேற்று (12) திடீர் கண்காணிப்பு விஜயமொன்றை மேற்கொண்டு அங்குள்ள நிலைமைகளை நேரடியாக பார்வையிட்டு குறைபாடுகள் பற்றி கேட்டறிந்தும் கொண்டார். வைத்தியசாலையை அன்டியுள்ள பிரதேசத்தில் அதிகமான யானைகளின் நடமாற்றம் இருப்பதால் வைத்தியசாலையைச் சுற்றி யானை வேலி அமைப்பதற்குத் தேவையான பணிகளை உடனடியாக துரிதப்படுத்துமாறு உரிய அதிகாரிகளுக்கு ஆளுநர் பணிப்புரை விடுத்தார். வட கிழக்கு மாகாணம் இரண்டாக பிரிக்கப்பட்ட காலத்திலிருந்து கிழக்கு மாகாணத்தில் பல ஆளுநர்கள் பதவி வகித்தும் இப்பிரதேசத்துக்கு எவ்வித விஜயத்தினையும் இதுவரை மேற்கொள்ளவில்லை. ஆனால் ஒரு பெண் ஆளுநராக பதவியெற்ற இந்த ஆளுநர் குறித்த வைத்தியசாலைக்கு விஜயம் செய்து அம்மக்களின் பிரச்சினைகளையும், அரச நிறுவனங்களுக்குத் தேவையான விடயங்களையும் நேரடியாக பார்வையிட்டு, அதற்குரிய நடவடிக்கையினை மேற்கொண்டிருந்தமையும் இதுவே முதற்தடவை என்பதும் குறிப்பிடத்தக்கது.

இந்த விஜயதத்தின்போது, மாகாண பிரதம செயலாளர் ஆர்.எம்.பி.எஸ்.ரத்நாயக்க, ஆளுநர் செயலக செயலாளர் எல்.பி.மதநாயக்க, மாகாண வீதி பயணிகள் போக்குவரத்து அதிகார சபையின் தலைவர் சாமர நிலங்க ஆகியோர் கலந்து பங்கேற்றிருந்தனர்.

# மேலதிக அரசாங்க அதிபர் முன்னிலையில் இடம்பெற்ற களிகம்பு பொல்லடி அரங்கேற்றம்

**நூருல் /ஹுதா உமர்**

கிழக்கு மாகணத்திலுள்ள முஸ்லீம்களின் தனித்துவமான கலைகளாக பக்கீர் பைத், சீனடி, சிலம்படி, ஷைபுல்லாஹ் விளையாட்டு, ரபான் பைத், களிகம்பு ஆட்டம் போன்ற பல்வேறு கலையம்சங்கள் காணப்படுகின்றன. முஸ்லிம்களின் அருகிவரும் பாரம்பரிய கலை வடிவங்களில் ஒன்றான களிகப்பு பொல்லாடி காணப்படுகின்றது. குறிப்பாக இறக்காமத்தின் பூர்வீக கலையம்சமாக களிகம்பு பொல்லடி ஆட்டம் காணப்படுகிறது. தஸ்லிம், நிருவாக உத்தியோகத்தர் ஜே.எம். ஜமீல், மாவட்ட கலாச்சார உத்தியோகத்தர் ரி.எம். ரின்ஸான், கலாச்சார அதிகார சபையின் பிரதி தலைவர் எஸ்.எல். நிசார், பொருளாளர் ஏ.கே.அஸ்வர் ஆகியோர் கலந்து கொண்டதுடன் மேலும் பிரதேச செயலக சிரேஷ்ட அபிவித்தி உத்தியோகத்தர் யூ.எல். ஆஹிர், கலாச்சார அபிவித்தி உத்தியோகத்தர்களான எம்.ஏ.நௌபீஸா, ஏ.எல்.பரீனா, வசந்தா ரஞ்ஜனி (கிழக்கு மாகாணம்), உளவளத்துணை உத்தியோகத்தர்



இறக்காமம் இஸ்லாமிய கலை காச்சார மரபுரிமைகள் அமைப்பின் தலைவர் ஏ.எல். அலியார், பிராந்தியத்தின் மூத்த அண்ணாவியார் கலாபூஷணம் பி.டி. யாசீன் பாவா ஆகியோர் கிராமிய கலைகளை உயிர்ப்பிப்பதிலும் அடுத்த சந்ததிக்கு பயிற்றுவிப்பதிலும் அரும் பங்காற்றி வருகின்றனர்.

அந்தவகையில், 06 வது களிகம்பு பரம்பரையாக 15 வது களிகம்பு பொல்லடி குழுவான இறக்காமம் அல்-மதீனா வித்தியால மாணவர்களின் அரங்கேற்றம் கல்லூரி முதல்வர் எம்.ஐ. ஜௌபர் தலைமையில் கல்லூரி வளாகத்தில் இடம்பெற்றது. இந் நிகழ்வுக்கு, பிரதம அதிதியாக அம்பாறை மாவட்ட மேலதிக மாவட்ட செயலாளர் வீ.ஜெகதீஷன், விஷேட அதிதியாக இறக்காமம் பிரதேச செயலாளர் எம்.எஸ்.எம்.ரஸ்ஸான் ஆகியோர் கலந்து கொண்டனர். மேலும், சிறப்பு அதிதிகளாக உதவி பிரதேச செயலாளர் ஏம்.ஏ.சி.அஹமட் நஸீல்,கோட்டக் கல்வி பணிப்பாளர் யூ.எல்.மஹ்மூட் லெப்பை, சமுர்த்தி தலைமைப்பீடமுகாமையாளர் ஏ.சி.எம். ஏ.எச்.றகீப், ஏ.எல். ஆமீனா உம்மா ஆகியோரும் சிறப்பு அதிதிகளாக கலந்து கொண்டனர். இந்நிகழ்வின் விஷேட அம்சமாக மருவிவரும் பாரம்பரிய களிகம்பு பொல்லடிக்களையை பாதுகாப்பதில் அரும் சேவையாற்றிவரும் மூத்த கலைஞரும் அண்ணாவியருமான பி.டி. யாசீன் பாவா, இறக்காமம் இஸ்லாமிய கலை காச்சார மரபுரிமைகள் அமைப்பின் தலைவர் ஏ.எல். அலியார், 15 வது களிகம்பு பொல்லடி குழுவான இறக்காமம் அல்-மதீனா வித்தியால மாணவர்களை பயிற்றுவிக்க ஒத்துழைப்பு வழங்கிய கல்லூரி முதல்வர் எம்.ஐ. ஜௌபர், மாணவர்களுக்கு உதவி வழங்கிய திருமதி ஏ.எல். ஆமீனா உம்மா ஆகியோரும் அதிதிகளால் பொன்னாடை போற்றி கௌரவிக்கப்பட்டது.

மத்திய கலாச்சார திணைக்களத்தினால் மாவட்ட கலாச்சார உத்தியோகத்தர் ரி.எம். ரின்ஸான் அவர்களின் ஏற்பாட்டில் பாரம்பரிய களிகம்பு-பொல்லடி கலை பயிற்சியை பூர்த்தி செய்த மாணர்களுக்கு சான்றிதழ் வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.


# கடந்த 15 நாட்களாக மீன்பிடிக்க சென்று திசைமாறி காணாமல் போன 4 மீனவர்களும் மீட்பு

**பாறுக் ஷிஹான்**

கடந்த 15 நாட்களாக மீன்பிடிக்க சென்று திசைமாறி காணாமல் போனதாக கூறப்பட்ட 4 மீனவர்களும் பாதுகாப்பாக உள்ளனர் எனவும் அவர்களை மீட்க துரித நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது என அம்பாறை மாவட்ட அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் உதவிப் பணிப்பாளர் எம்.ஏ.சி. முகம்மட் றியாஸ் தெரிவித்தார். கிழக்கு மாகாணத்தின் அம்பாறை மாவட்டம் கல்முனையில் இருந்து கடந்த 26 செப்டம்பர் மாதம் ஆழ்கடல் மீன் பிடிக்கு சென்ற 4 மீனவர்கள் 15 நாட்கள் கடந்தும் இன்னும் வீடு திரும்பவில்லை என்ற விடயம் தொடர்பாக எமது ஊடகவியலாளர் பாறுக் ஷிஹானிடம் இன்று கருத்து தெரிவிக்கையில் மேற்கண்டவாறு கூறினார். காணாமல் போண மீனவர்கள் அனைவரும் தற்போது மீட்கப்பட்டு சொந்த இடத்திற்கு அழைத்து வரப்பட்டுள்ளனர்.கல்முனை மாநகர சபை எல்லைக்குட்பட்ட கடற்பரப்பில் இருந்து கடந்த 26.09.2022 அன்று மாலை புறப்பட்டு சென்ற 4 மீனவர்கள் குறித்து இதுவரை எந்த தகவலும் கிடைக்கவில்லை.இது குறித்து ஊடகங்களில் செய்தி வெளியாகி இருந்தது.இதில் கல்முனையை சேர்ந்த எம்.ஐ.எம் மஜிட் (வயது 55), சி.எஸ்.எச்.எம் நிப்றாஸ் (வயது 36 ), ஏ.பி கபீர் (வயது 50) ,எம்.என். ஹில்மி (வயது 33),ஆகிய மீனவர்களே குறித்த படகில் பயணம் செய்து காணாமல் போய் இருந்தனர்.அவர்கள் சென்ற படகின் ஜிபிஸ் தொழிநுட்ப கருவி பழுதடைந்தமையினால் திசை மாறி பயணித்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இவ்வாறு திசை மாறி தத்தளித்த குறித்த படகினை ஒரு மீனவர் கண்டு கடற்படையினருக்கு அறிவித்துள்ளார்.இதற்கமைய மீட்பு நடவடிக்கை உள்ளுர் மீனவரின் ஒத்துழைப்புடன் கரைக்கு காணாமல் சென்ற 4 மீனவர்கள் உள்ளிட்ட படகு வாழைச்சேனை துறைமுகத்திற்கு இழுத்து வரப்பட்டமை குறிப்பிடத்தக்கது. மேலும் மீட்கப்பட்ட மீனவர்கள் அனைவரும் மருத்துவ பரிசோதனையின் பின்னர் வீடுகளுக்கு செல்லவுள்ளமை குறிப்பிடத்தக்கது. இம்மீட்பு நடவடிக்கையின் போது கடற்படை மீன்பிடி திணைக்களம் அம்பாறை மாவட்ட ஆழ்கடல் படகுகள் சங்கம் உள்ளிட்டோர் பங்கேற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# மீண்டும் தம்பிலுவில் பிரதேசத்தில் கடலரிப்பு அதி திவீரம்



**( வி.ரி. சகாதேவராஜா)**

திருக்கோவில் பிரதேசத்துக்கு உட்பட்ட தம்பிலுவில், திருக்கோவில் பிரதேசங்களில் பாரிய கடலரிப்பு மீண்டும் ஏற்பட்டுள்ளது. நேற்றைய தினம் தம்பிலுவில் குருகுலம் பகுதியில் பாரிய கடலரிப்பு மிகவும் திவீரமாக இருந்தது. நேற்று அங்கு பல தென்னை மரங்களை கடல் காவு கொண்டிருக்கின்றது. மக்கள் அச்சத்துடன் வாழ்கின்றார்கள். மீனவர்கள் கடலுக்கு செல்ல முடியாதுள்ளது. அவர்களது வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டுள்ளது. சம்பந்தப்பட்ட அதிகாரிகள் விரைந்து கவனம் எடுப்பார்களா என்று மக்கள் வினவுகின்றார்கள்.

# மின்னல் தாக்கி குடும்பஸ்தர் பலி

**பொன்ஆனந்தம்**

திருகோணமலை மூதூர் பிரதேசத்தில் உள்ள கங்குவேலி கிராமத்தை ச்சார்ந்த குடும்பஸ்தர் ஒருவர் நேற்று மாலை 3.30 மணியளவில் மின்னல் தாக்கி பலியானதாக அறிவிக்கப்பட்டுள்ளது. இவர் வயல் வேலைக்குச் சென்றிருந்த வேளையிலேயே இச்சம்பவம் நடந்துள்ளது என உறவினர்கள் முறையிட்டுள்ளனர். மரணமான குறித்த நபரான கோபாலசுவாமி சந்திரகுமார் (45)என்பவரது உடல் நேற்று மாலை மேலதிக விசாரணைக்காக மூதூர் தள வைத்தியசாலக்கு கொண்டு வரப்பட்டு விசாரணைகள் இடம்பெற்றது. இவர் மூன்று ஆண்பிள்ளைகளின் தந்தை எனவும் விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

# போக்கட்டி அ.த.க பாடசாலையின் ஆசிரியர் தின நிகழ்ச்சி



**த.சுபேசன்**

கொடிகாமம் போக்கட்டி அ.த.க பாடசாலையின் ஆசிரியர் தின நிகழ்வுகள் 06ஃ10 வியாழக்கிழமை பாடசாலை அதிபர் தி.அபராஜிதன் தலைமையில் பாடசாலை மண்டபத்தில் இடம்பெற்றிருந்தது. நிகழ்வில் விருந்தினர்களாக தென்மாட்சிக் கல்வி வலய சேவைக்கால ஆசிரிய ஆலோசகர் வே.உதயகுமார் மற்றும் பொதுச் சுகாதாரப் பரிசோதகர் ஞா.குணசாந்தன் ஆகியோர் கலந்து சிறப்பித்திருந்தனர்.

# ஊவாவின் ஊற்று நூல் வெளியீடு



**தலவாக்கலை பி.கேதீஸ்**

தேசிய கல்வி நிறுவகத்தின் பட்டப்பின் கல்வி டிப்ளமோ கற்கை நெறியின் பதுளை பிராந்திய நிலைய 2020ஃ2021 ஆம் கல்வியாண்டு ஆசிரிய மாணவர்களின் பிரியாவிடை மற்றும் ஊவாவின் ஊற்று நூல் வெளியீட்டு விழாவும் பாரதி தமிழ் வித்தியாலயத்தில் நடைபெற்றது. நிலைய இணைப்பாளர் பி. ஆனந்தகுமார் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் பிரதம அதிதியாக தேசிய கல்வி நிறுவகத்தின் சிரேஷ்ட விரிவுரையாளரும் பாடநெறியின் தேசிய இணைப்பாளர் எஸ்.ஷிபான் மற்றும் சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி.எஸ். கருணாகரன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

# திருக்கோவில் இல்மனைட் அகழ்வு தொடர்பாக ஜனாதிபதியிடமிருந்து கடிதம்

**(வி.ரி. சகாதேவராஜா)**

அம்பாறை மாவட்டம் திருக்கோவில் பிரதேசத்தில் பிராந்தியத்தில் மக்களின் பாரிய எதிர்ப்புக்கு மத்தியில் முன்னெடுக்கப்படவிருக்கின்ற இல்மனைட் அகழ்வு விவகாரம் தொடர்பாக ஜனாதிபதி யிடமிருந்து கடிதம் அனுப்பி வைக்கப்பட்டு இருக்கின்றது. தமிழ் தேசிய கூட்டமைப்பின் அம்பாறை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் தவராசா கலையரசன் இதற்கான கடிதத்தை ஜனாதிபதிக்கு அனுப்பி இருந்தார். ஜனாதிபதி செயலகத்திலிருந்து நேற்று அம்பாறை மாவட்ட அரசாங்க அதிபர் டக்லஸ் அவர்களுக்கு ஒரு கடிதம் அனுப்பி வைக்கப்பட்டு இருக்கின்றது.

திருக்கோவில் இல்மனைட் விவகாரம் தொடர்பாக எதிர்வரும் 14ஆம் திகதிக்கு முன்பதாக அறிக்கை சமர்ப்பிக்குமாறு கேட்கப்பட்டிருக்கின்றது. ஜனாதிபதியின் செயலாளர் ஏ.பி. ஏக்கநாயக்க

இந்த கடிதத்தை அனுப்பி வைத்திருக்கின்றார். அண்மைக்காலமாக இல்மனைட் அகழ்வுக்கு எதிராக அப் பிராந்திய மக்களிடமிருந்து பாரிய எதிர்ப்பலைகள் கிளம்பி வருவது குறிப்பிடத்தக்கது

# சாவகச்சேரி வைத்தியசாலையில் விபத்து மற்றும் அவசர சிகிச்சைப்பிரிவு திறந்து வைப்பு



**த.சுபேசன்**

சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் நிர்மாணிக்கப்பட்ட விபத்து மற்றும் அவசர சிகிட்சைப் பிரிவுகள் 10ஃ10ஃ2022 திங்கட்கிழமை காலை திறந்து வைக்கப்பட்டுள்ளன. சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையின் வைத்திய அத்தியட்சகர் சி.குமரவேள் தலைமையில் இடம்பெற்ற திறப்பு விழா நிகழ்வில் பிரதம விருந்தினராக வடக்கு மாகாண பிரதம செயலாளர் எஸ்.எம்.சமன் பந்துலசேன கலந்து கொண்டு கட்டிடத்தை திறந்து வைத்திருந்தார். மேலும் நிகழ்வில் தென்மராட்சி அபிவிருத்திக் கழக பிரதிநிதிகள்,கொழும்பு தெற்கு றோட்டரிக் கழக பிரதிநிதிகள்,வைத்தியசாலையின் முன்னாள் அத்தியட்சகர் டயாழினி,வைத்திய அதிகாரிகள் உள்ளிட்ட பலரும் கலந்து சிறப்பித்திருந்தனர். விபத்து மற்றும் அவசர சிகிட்சைப் பிரிவு அலகானது இரண்டாவது சுகாதாரத் துறை மேம்பாட்டுத்திட்டம்,மாகாண குறித்தொதுக்கப்பட்ட அபிவிருத்தி நிதி மற்றும் ஆரம்ப சுகாதார பராமரிப்பு அமைப்பு வலுவூட்டும் நிகழ்ச்சித்திட்டம் ஆகிய ஒதுக்கீடுகள் மூலம் அமைக்கப்பட்டுள்ள அதேவேளையில் சத்திரசிகிட்சைக் கூடத்திற்கான மருத்துவ உபகரணங்களை தென்மராட்சி அபிவிருத்திக் கழகம் மற்றும் றோட்டரிக் கழகம் ஆகியன நன்கொடையாக வழங்கி வைத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## பன்சேனை பாரி வித்தியாலயத்தின் பரிசளிப்பு விழா













மட்டக்களப்பு மேற்கு கல்வி வலயத்திற்குட்பட்ட பன்சேனை பாரி வித்தியாலயத்தின் “ பரிசளிப்பு விழாவும் நூல் வெளியீடும் “ வித்தியாலய அதிபர் தேவப்போடி பவளசிங்கம் தலைமையில் நேற்றைய தினம் இடம்பெற்றது. இந் நிகழ்ச்சியில், மாவட்ட அரசாங்க அதிபர் திரு.க.கருணாகரன், சிவஸ்ரீ சி.மு.சச்சிதானந்த குருக்கள், மட்டக்களப்பு மேற்கு வலயக்கல்வி பணிப்பாளர் அகிலா கனகசூரியம், பிரதேச செயலாளர் சி.சுதாகர் மற்றும் கோட்டக்கல்வி பணிப்பாளர்கள், முன்னாள் கோட்ட கல்விப் பண்ணிப்பாளர்,பிரதேச சுகாதார பரிசோதகர், பிரதேச கிராம சேவை உத்தியோகத்தர்கள், பாடசாலையின் முன்னாள் அதிபர்கள், ஆசிரியர்கள் மற்றும் சமூக மட்ட அமைப்புக்களின் பிரதிநிதிகள் என பலரும் அதிதிகளாக கலந்து சிறப்பித்தனர்.

## பசிக்கு எதிரான உதவி





மட்டக்களப்பு லயன்ஸ் கழகம் பாடும் மீன் லியோ “பசிக்கு எதிரான உதவித் திட்டம்” என்ற தொனிப்பொருளில் **UKA UKHU** உடன் இணைந்து வெற்றிகரமாக உலர் உணவுப்பொதிகளை மக்களுக்கு வழங்கி வருகின்றனர்.

சர்வதேச பட்டினி தினம் மற்றும் ஆளுநர் பிறந்தநாளைச் சிறப்பித்து மட்டக்களப்பில் பல்வேறு பிரிவுகளிலும் உள்ள 100 பெண் தலைமை தாங்கும் குடும்பங்களுக்கு இந்நிவாரணப்பொதி வழங்கி வைக்கப்படவுள்ளன. இதன் முதற்கட்டமாக கிரான் பிரதேச செயலாளர் பிரிவில் வழங்கி வைக்கப்பட்டன.

## தோப்பூர் பிரதேசத்தில் சுகாதார வைத்தியதிகாரிகள் திடீர் பரிசோதனை



**தோப்பூர்**
**எம்.எம்.நௌபீக்**

தேசிய நுளம்பு ஒழிப்பு வாரத்தை முன்னிட்டு மூதூர் சுகாதார வைத்தியதிகாரி அலுவலக பிரிவின் தோப்பூர் பொது சுகாதார பரிசோதகர் பிரிவில் நுளம்பு ஒழிப்பு வீட்டுக்கு வீடு கள பரிசோதனைகள் (13) மேற்கொள்ளப்பட்டன. இன்றைய நிகழ்வு மேற்பார்வை பொது சுகாதார பரிசோதகர் ஐ.எம்.றினூஸ் அவர்களின் வழிகாட்டலில; **PHI, PHFO, SMHO, SKS,** பொலிஸ் மற்றும் கடற்படை அதிகாரிகள் பங்குபற்றியிருந்தமை குறிப்பிடத்தக்கதாகும். இன்றைய தினம் மொத்தமாக 530 இடங்கள் பரிசோதிக்கப்பட்டதுடன் 126 நுளம்பு பெருகுவதற்கு சாத்தியமான இடங்களும், 16 இடங்களில் நுளம்பு குடம்பிகளும் கண்டெடுக்கப்பட்டு வளாக உரிமயாளருக்கு எச்சரிக்கை விடுக்கப்பட்டதுடன் கண்டு பிடிக்கப்பட்ட நுளம்பு குடம்பிகள் அழிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கதாகும். மேலும் இன்றைய பரிசோதனையில் 16 வளாக உரிமையாளர்களுக்கு சிவப்பு அறிவித்தலும் விடுக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கதாகும்.

## யாழ் பல்கலைக்கழகத்தின் விவசாய பீடத்தின் புதிய உற்பத்தி

யாழ்ப்பாணப்பல்கலைக்கழகவிவசாயபீடத்தின் விலங்கு விஞ்ஞானத் துறையினரால் கண்டுபிடிக்கப்பட்ட “வில்வம் பழச்சாறு கலந்த பருகும் யோகட்” பானத்தில் அறிமுக நிகழ்வு நேற்றுப் புதன்கிழமை யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் இடம்பெற்றது. விவசாய பீடத்தின் விலங்கு விஞ்ஞானத் துறையினரால் மேற்கொள்ளப்பட்ட ஆய்வின் படி, சேதன முறையில் உற்பத்தி செய்யப்படக் கூடிய வில்வம் பழச்சாறு கலந்த பருகும் யோகட்டுக்கான உற்பத்தி ஒப்பந்தம் கடந்த வருடம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வணிக இணைப்பு அலுவலகத்தின் அனுசரணையுடன் முல்லைத்தீவில் அமைந்துள்ள முல்லை பாற்பொருள் உற்பத்தி நிலையத்துடன் மேற்கொள்ளப்பட்டிருந்தது. அந்த ஒப்பந்தத்துக்கமைய உற்பத்தி செய்யப்பட்டட வில்வம் பழச்சாறு கலந்த பருகும் யோகட்டை சந்தைப்படுத்தும் செயன்முறை நேற்று வைபவ ரீதியாக ஆரம்பித்து வைக்கப்பட்டது. இந்த நிகழ்வில் யாழ். பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் சி.சிறிசற்குணராஜா, முல்லை பாற்பொருள் உற்பத்தி நிலையத்தின் முகாமைத்துவப் பணிப்பாளர், ஜெய்கா



செயற்றிட்ட அதிகாரிகள், விவசாய பீட அதிகாரிகள், யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வணிக இணைப்பு அலுவலகத்தின் பணிப்பாளர், பல்கலைக்கழகப் பணியாளர்கள் உட்படப் பலர் கலந்து கொண்டனர்.

## நுவரெலியா மாவட்டத்தில் கோப்பி பயிர் செய்கையை அபிவிருத்தி



**தலவாக்கலை பி.கேதீஸ்**

நுவரெலியா மாவட்டத்தில் கோப்பி பயிர் செய்கையை அபிவிருத்தி செய்வதற்காக ஜப்பான் நாட்டு கியோதோ நிறுவனத்தின் அனுசணையுடன் 30 ஆயிரம் கோப்பி கன்றுகளும் 40 கிலோ கோப்பி விதைகளும் பகிர்தளிக்கும் வேலைத்திட்டத்தை நுவரெலியா மாவட்ட செயலாளர் நந்தன கலபட ஆரம்பித்து வைத்தார்.இதன் முதலாவது ஆரம்ப நிகழ்வில் நுவரெலியா மாவட்டத்திலுள்ள ஹங்குராங்கெத்த பிரதேசத்தில் இடம்பிடிய கிராமத்தில் நடைபெற்றது. இதன் போது அங்குள்ள மக்களுக்கு 8 ஆயிரம் கோப்பி கன்றுகளும் கோப்பி விதைகளும் வழங்கிவைக்கப்பட்டன. இந்நிகழ்வில் ஹங்குராங்கெத்த பிரதேச செயலாளர் ஐ. எம். சேனநாயக்க உள்ளிட்ட பலர் கலந்துக்கொண்டனர்.